# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

ஏண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

***********

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ).

***********

**முறையீட்டு மனு எண்: 045/2019/பே**
**ஆணை நாள் 26–03–2019**

****

திரு,கோபிநாத்,
நந்திவரம் கூடுவாஞ்சேரி,
காஞ்சிபுரம் மாவட்டம். — முறையீட்டு மனுதாரர்.

செயல் அலுவலர்,
நந்திவரம் கூடுவாஞ்சேரி பேரூராட்சி,
காஞ்சிபுரம் மாவட்டம். — எதிர் மனுதாரர்.

**ஆணை.**

காஞ்சிபுரம் மாவட்டம், நந்திவரம்–கூடுவாஞ்சேரி பேரூராட்சியினைச் சேர்ந்த திரு.எம்.கோபிநாத், என்பவரது 18.01.2019 நாளிட்ட (மின்னஞ்சல் முலம் பெறப்பட்டது) மனு இம்முறைமன்ற நடுவத்தில் 21.01.2019 அன்று பெறப்பட்டு, மேற்படி முறையீட்டு மனுவிற்கு எண்.045/2019 என எண்ணிடப்பட்டது. முறையீட்டு மனு மீதான அறிக்கைகள் பெறப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு தீர்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

திரு. எம்.கோபிநாத், முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில் தான் நந்திவரம்–கூடுவாஞ்சேரி பேரூராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் கடந்த மூன்று ஆண்டுகளுக்கும் மேல் வசித்து வருவதாகவும், தனது வீட்டிற்கு வீட்டு வரி விதிப்பு செய்து வரி செலுத்துவதற்கான கேட்பினை வழங்கக் கோரி நந்திவரம்–கூடுவாஞ்சேரி பேரூராட்சியினை அணுகியதாகவும், ஆனால் நந்திவரம்–கூடுவாஞ்சேரி பேரூராட்சி மூலம் தனது வீட்டிற்கு வரி விதிப்பு செய்து தராத நிலையில் தன்னால் தனது வீட்டிற்கு உரிய வீட்டு வரி/சொத்து வரியினை கடந்த மூன்று

ஆண்டுகளுக்கும் மேலாக செலுத்த இயலாத நிலை உள்ளதாகவும், பேரூராட்சி மூலம் தனது வீட்டிற்கு வீட்டு வரி விதிப்பு செய்து வீட்டு வரி/சொத்து வரியினை வசூலிக்க பேரூராட்சிக்கு ஆணையிடுமாறும் தனது மனுவில் கோரியுள்ளார்.

30.01.2019 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணையில் முறையீட்டு மனுதாரருக்கு, தனது முறையீட்டு மனுவினை 2015–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ (முறையீடுகள் தாக்கல் வழிமுறை, விசாரணை மற்றும் இறுதி செய்தல்) விதிகள், விதி–4ன்படி உரிய படிவம் –1ல் பூர்த்தி செய்தும், விதி 6–ன்படி கட்டணமாக ரூ.10/–க்கான நீதி மன்ற வில்லையுடன் சமர்ப்பிக்க தெரிவித்தும் ஆணையிடப்பட்டது. இருப்பினும், பேரூராட்சியின் வரி வருவாய் தொடர்பானதென்பதால் முறையீட்டு மனுதாரரின் மின்னஞ்சல் மூலம் பெறப்பட்ட கடிதத்திலுள்ள மேற்படி கோரிக்கை குறித்து விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்குமாறு இம்முறைமன்ற நடுவ 30.01.2019 நாளிட்ட அறிவிப்பாணை மூலம் நந்திவரம்–கூடுவாஞ்சேரி பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

நந்திவரம்–கூடுவாஞ்சேரி பேரூராட்சி செயல் அலுவலர் தனது 06.03.2019 நாளிட்ட கடிதத்தில், முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ள நந்திவரம்–கூடுவாஞ்சேரி பேரூராட்சிக்குட்பட்ட 6–வது வார்டு, பரமேஸ்வரி நகர், மனை எண்–12ல் குடியிருந்து வரும் திரு.எம்.கோபிநாத் என்பவர் தனது வீட்டிற்கு வரி விதிப்பு செய்யக் கோரி உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவத்தில் சமர்பித்த மனுவினைத் தொடர்ந்து, முறையீட்டு மனுதாரரின் கோரிக்கை மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் விதமாக, பேரூராட்சி மூலம் இடத்தினை தல ஆய்வு மேற்கொண்டதில் முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ள சொத்தானது திருமதி.பரமேஸ்வரி என்பவரது பெயரில் உள்ளதை கண்டறிந்து உரிய ஆவணங்களைப் பெற்று பேரூராட்சி மூலம் சொத்து வரி விதிப்பு எண். 13804 என வரி விதிப்பு செய்து, அதற்கான சொத்து வரி நிர்ணயம் செய்யப்பட்டு 2016–17 முதல் 2018–19 முடிய ரூ.4,616/– தற்போது வசூல் செய்யப்பட்டுள்ளதெனத் தெரிவித்து ரசீது எண்.102602/நாள் 19.02.2019 நகலினையும் இணைத்து சமர்ப்பித்துள்ளார்.

மேலும் மனுதாரர் தனது 14.03.2019 நாளிட்ட மின்னஞ்சலில் இம்முறைமன்ற நடுவ நடவடிக்கையைத் தொடர்ந்து தனது வீட்டிற்கு நந்திவரம்–கூடுவாஞ்சேரி பேரூராட்சி மூலம் சொத்து வரி விதிப்பு செய்து, சொத்து வரி நிர்ணயம் செய்யப்பட்டதாகவும், அதனடிப்படையில், தான் பேரூராட்சிக்கு செலுத்தவேண்டிய சொத்து வரித் தொகையினை செலுத்திவிட்டதாகவும் தெரிவித்து முறைமன்ற நடுவ விரைவு நடவடிக்கைக்கு தனது நன்றியினை தெரிவித்து தனது கோரிக்கை தற்போது நிறைவேற்றப்பட்டுள்ளதை உறுதி செய்துள்ளார்.

இருப்பினும், இந்நேர்வில் பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கையுடன் இணைத்து சமர்ப்பிக்கப்பட்டுள்ள வீட்டு வரி ரசீதினை பரிசீலித்ததில், மேற்படி வீட்டிற்கு 2016–17 முதல் 2018–19 வரையிலான காலத்திற்கு தற்போதுதான் வரி வசூலிக்கப்பட்டுள்ளது புலனாகிறது. பேரூராட்சிக்கான வரி வருவாய் இனத்தில் இவ்வளவு தாமதமாகவும், மெத்தனமாகவும் செயல்பட்டமைக்கு பொறுப்பான வரித் தண்டலர் மற்றும் தொடர்புடைய பணியாளர்கள் மீது உரிய விளக்கங்கள் பெற்று நடவடிக்கை எடுக்கவும், இனி வருங்காலங்களில் இது போன்ற தாமதங்கள் ஏற்படாமலிருப்பதை கண்டிப்பாக உறுதி செய்திட வேண்டுமென நந்திவரம்–கூடுவாஞ்சேரி பேரூராட்சி செயல் அலுவலருக்கு வலியுறுத்தியும் ஆணையிடப்படுகிறது.

2019–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 26–ஆம் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

–//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//–

செயலாளர்.

27.3.19

பெறுநர்
1.திரு.எம்.கோபிநாத்,
பிளாட் எண்.12,
பரமேஸ்வரி நகர்,
நந்திவரம் – கூடுவாஞ்சேரி,
காஞ்சிபுரம் மாவட்டம்.
2.செயல் அலுவலர்,
நந்திவரம் கூடுவாஞ்சேரி பேரூராட்சி,
காஞ்சிபுரம் மாவட்டம்.
3.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
காஞ்சிபுரம் மண்டலம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
காஞ்சிபுரம்.

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனி எழுத்தர்.
முறைமன்ற நடுவ செயலர் அவர்களின் தனி எழுத்தர்.
உதவிப் பிரிவு அலுவலர் (ஊராட்சிகள்)